Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

# Characteristics of Women Characters in the Kamban's *Ramayana*

**Dr. P. G. Saraswathi,** Assistant Professor, Tamil Research Centre, S.T. Hindu College, Nagercoil, Tamilnadu, India.
ORCiD: http://orcid.org/0009-0002-0263-7657
**DOI: 10.5281/zenodo.14744708**

## Abstract

*In the beginning, God first created the heavens and the earth. Then he created all living beings. He created mankind to enjoy the virtue of life. He created both genders, male and female to gain value and expansion. The woman lived as the keeper of the house lived in harmony with domestic comforts and served as an example of domestic life. In Tamil culture, the mother is called Ammaiyappan. We teach education by putting first as mother, then father, guru and god. Auvaiyar is a notable Sangam poet who says that what is known is the size of a hand and the unknown is the size of the world. A woman is the reason for all success of a man. That is why in Tamil tradition we see Saraswati for education, Lakshmi for wealth and Parvati for valour. The woman is the embodiment of love. The woman is the embodiment of character. The woman is the destroyer of pride. The woman is the helper of all success. Hence, women in Tamil society play an important role. Kambar is a great Tamil poet. He wrote the "Ramayana" in Tamil. The characters such as Kosala, Kaikeyi, Sumatrai, Sita, Urmila, Trisadai and Mandothari excel as female characters who have virtues in their life. This article explains the characteristics of notable women in Kambar's "Ramayana."*

**Keywords:** Kambar, Ramayana, Characteristics, Virtue.

## References

[1] Kumari Krishnaveni, L. "Nithilathil Puthumai Pen." *Vetrimunai, International Journal of Life Development*. World Tamil Development Conference, 2024.
[2] Sivagnanam, M. P. *Kambar Kaviyinpam*. Inpa Nilayam, Mylapore, June 1966.
[3] Sorna Jaya, P. "Sanga Ilakkiyangalil Pengalin Vazhviyal Nerigal." *International Journal of Tamil Language and Literature.* Vol.2, Special Issue 3, Feb.2020, p. 215.
[4] Thirumuruga Kripananda Varrier. *Kambaramayana Virivurai*. Karthikeyan Publications, Chennai.
[5] Manickam, V. Su. *Kambar*. Manivasagar Library, Chidambaram, 1965.
[6] *First Anniversary Magazine*. Nellai Kamban Kazhagam, Tirunelveli, December 2009.
[7] Raghunathan, S. *Samuthaya Munnetathil Magalir*. Murugananda Publishing House, Chennai-78.
[8] Srimath Swami & Sidbhavananda. *Ramayanam.* Sri Ramakrishna Tapovanam, Thiruparaithurai, Tiruchirappalli.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

# கம்பன் படைத்த இராம காதையில் பெண் கதாபாத்திரங்களின் சிறப்பியல்புகள்

**முனைவர் ப. கோ. சரஸ்வதி,** உதவிப்பேராசிரியர், தெ. தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: http://orcid.org/0009-0002-0263-7657**
**DOI: 10.5281/zenodo.14744708**

**ஆய்வுச்சுருக்கம்**

*ஆதிகாலத்தில் இறைவன் வானத்தையும் பூமியையும் முதலில் படைத்தான். பின்னர் சகல உயிர்களையும் படைத்தான். இவையெல்லாம் அனுபவிக்கும் நோக்கத்திலே மனித இனத்தையும் படைத்தான். மனித இனம் மதிப்பு பெறுகின்ற நோக்கிலும் விரிவுபடுகின்ற நோக்கிலும் ஆண் பெண் என்கிற இரு பாலரையும் படைத்தான். பெண் வீட்டைக் காப்பவளாகவும் இல்லற சுக துக்கங்களை ஒருசேர அனுசரித்து வாழ்ந்து இல்லற வாழ்க்கைக்கு ஒரு உதாரணமாக விளங்கினாள். அம்மையப்பன் என்று தாய்க்கு தான் முதலிடம் கொடுத்து பேசுகிறோம். மாதா, பிதா, குரு, தெய்வம் என பெண்ணுக்கு முதலிடம் கொடுத்து நாம் கல்வியை போதிக்கின்றோம். கற்றது கையளவு கல்லாதது உலகளவு என்று பாடிய ஔவையாரும் ஒரு பெண் தான். ஒரு ஆணின் சகல வெற்றிக்கு காரணமாக இருப்பவள் பெண். அதனால் தான் கல்விக்கு சரஸ்வதி, செல்வத்திற்கு லட்சுமி, வீரத்திற்கு பார்வதி என்று நாம் சக்தியின் வடிவிலேயே எதனையும் காண்கிறோம். பெண் அன்பின் வடிவானவள் பெண் பண்பின் உருவானவள் பெண் அகந்தையை அழிப்பவள் பெண் வெற்றிக்கு துணை புரிபவள் பெண்கள். இராம காதையில் இராமன் நாயகனாக இடம்பெற்று இருந்தாலும் இக்காப்பியத்திற்கு முக்கிய காரணமான பெண் கதாபாத்திரங்களாக சிறந்து விளங்கும் கோசலை, கைகேயி, சுமத்திரை, சீதை, ஊர்மிளா, திரிசடை, மண்டோதரி இவர்களுடைய மனநிலையில் என்னென்ன நிகழ்வுகள் நிகழ்கின்றன என்பதை ஆராய்ந்து இக்கட்டுரை தெளிவாக விளக்குகின்றது.*

**குறிப்புச்சொற்கள்:** கம்பர், ராமாயணம், பண்புகள், அறம்.

**முன்னுரை**

தமிழ் காப்பிய வரலாற்றில் கம்பராமாயணத்துக்கு என்று தனிச் சிறப்புகள் உள்ளன. இதில் உள்ள கதைக்கோப்பு தழுவலாக அமைந்தாலும் தமிழ் சமூகப் பண்பாட்டின் வெளிப்பாட்டுக்காக பல்வேறு மாற்றங்களைச் செய்து தமிழில் எழுந்த காப்பியம் என்று சொல்லுமளவு தனி நூலாக விளங்குகின்றது. இதன் மூலநூல் வடமொழியில் வான்மீகி எழுதிய ஆதிகாவியம் என்று அழைக்கப்படும் வான்மீகி இராமாயணம் ஆகும். கம்பர், தான் எழுதிய இராம காவியத்திற்கு வைத்த பெயர் 'இராமாவதாரம்' ஆகும். ஆனால் இப்பெயர் நாளடைவில்

கம்பரின் கவிச்சிறப்பால் கம்பராமாயணம் என்றே வழங்கல் ஆயிற்று. வால்மீகி முனிவர் வடமொழியில் இயற்றிய இராமாயணத்தை முதல் நூலாகக் கொண்டு எழுந்த வழிநூல் கம்பராமாயணம் ஆகும். இது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப்பொருட்கள் நான்கையும் திறம்பட விவரித்து பரம்பரையான பழைய வரலாறுகளைத் தொகுத்துக் கூறுகின்றமையால் 'இதிகாசம்' என்னும் சிறப்புடையதாயிற்று. கம்பராமாயணத்தில் உள்ள பாடல்களின் சொல்லழகும் பொருள் நுட்பமும் கதாபாத்திரங்களின் இயல்பை விளக்கும் முறையும் நாகரீக வாழ்க்கையின் ஒழுங்கும், அறிஞர் உள்ளங்களை கொள்ளை கொள்வனவாகும். கம்பனின் சொல்லாடல் முறையில் நுட்பமான பல பெண் கதாபாத்திரங்கள் இருக்கிறார்கள். பெண் கதாபாத்திரங்களாக வலம் வருகிற கோசலை, கைகேயி, சுமத்திரை, சீதை, ஊர்மிளா, திரிசடை, மண்டோதரி என பெண் கதாபாத்திரங்கள் வருகின்றனர். கம்பராமாயணத்தில் இந்த பெண் பாத்திரங்களின் சிறப்புகள் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கோசலையின் பாத்திரப்படைப்பு**

இராமாயணத்தில் இடம் பெறும் மைய கதாபாத்திரம் கோசலை. தசரதனின் முதல் மனைவி. இராமனைப் பெற்றெடுத்தவள். தன்னுடைய நல்ல குணத்தால் 'பெண்களில் சிறந்தவள்' என்று வர்ணிக்கப்படுகிறார். இராமன் பதினான்கு ஆண்டுகள் வனவாசம் மேற்கொள்ளச் சென்ற போது தானும் உன்னுடன் வனவாசம் செல்ல வருவேன் என முறையிடுகிறாள். இராமனோ அன்னை கௌசல்யா தேவியை சமாதானப்படுத்தி ஸ்திரீ தர்மத்தை எடுத்துச் சொல்லி திருமணமான பெண்கள் கணவனை விட்டு பிரிய கூடாது என்றும், அதனால் என் தந்தை தசரதன் இருக்கும் இடமான அயோத்தியில்தான் தாங்கள் இருக்க வேண்டும் என்று கூறிய போது தன்னுடைய மகன் சொல்லை தட்டாத சிறந்த தாயாக விளங்குகிறாள் கோசலை.

**கைகேயியின் பாத்திரப்படைப்பு**

கம்பனின் பெண் பாத்திரங்களில் தலை சிறந்து விளங்குபவள் கைகேயி. இவளுடைய பாத்திரப் படைப்பில் பெருங்கொடுமைக்காரியாக, இரக்கமற்றவளாக, பண்பற்றவளாக, கணவனின் உயிரைப் போக்கியவளாக, கைகேயியின் பாத்திரப்படைப்பு அமைந்திருந்தது. ஆனால் கம்பனோ கைகேயியை,

**நாற்கடற் படுமணி நளினம் பூத்ததோர்**
**பாற்கடற் படுதீரைப் பவள வல்லியே**
**போற்கடைக் கண் அளி பொழியப் பொங்கணை**
**மேற்கிடந் தாள்தனை விரைவின் எய்தினாள் (கம்பராமாயணம்)**

எனக் கூறுகிறார். கைகேயி எப்படி காணப்பட்டாள் என்றால், அமைதி ததும்பும் மதுமுகத்துடன் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ள செந்தாமரைச் செல்வியை ஒத்தவள் என்றும், அவளது

அகமனம், ஆழ்மனம், சிந்தை, செயல் அனைத்திலும் அருள் நிரம்பியுள்ளது எனவும் கூறுகிறார். கைகேயி மிகவும் நல்லவள். உயர்ந்த பண்பை உடையவள். தசரத மன்னன் இராமனுக்கு பட்டாபிஷேகம் என்று கூறியதைக் கேட்ட கூனி கைகேயிடம் வந்து முதலில் கூறுகிறாள். கேட்ட மாத்திரத்தில் கைகேயி மகிழ்ச்சியின் உச்சத்தில் சென்று மந்தரைக்கு கழுத்தில் கிடந்த மாலையைப் பரிசாகக் கொடுக்கிறாள். அதை வாங்க மறுத்த மந்தரையைப் பார்த்து "இராமனைப் பயந்ததற்கு இடர் உண்டோ? அதாவது இராமனை தான் பெற்றெடுத்த மகனாக நினைத்தாள். ஆனால் அவளுடைய மனதில் கூனி கொஞ்சம் கொஞ்சமாக விடத்தை கலக்குகிறாள். கூனி கைகேயியை நோக்கி,

**புரியும் தன்மகள் அரசு எனின்**
**பூதலம் எல்லாம்**
**விரியும் சிந்தனைக் கோசலைக்கு**
**உடைமை ஆம் என்றால்**
**பரியும் நின்குலப்**
**புதல்வற்கும் நினைக்கும் இப்பார் மேல்**
**உரியது என் அவள்**
**உதவிய ஒரு பொருள் அல்லால் (கம்ப., 1477)**

இராமனுக்கு முடி சூட்டிவிட்டால் அதன்வழி சொத்துக்களும் அதிகாரங்களும் இராமனின் அன்னையாகிய கோசலைக்குப் போய் சேர்ந்துவிடும். உன் மகன் பரதனுக்கு ஏதாவது ஒன்று தேவையானால் நீ சென்று கோசலை இடத்தில் கேட்டுத்தான் பெற வேண்டும். கேகய நாட்டு இளவரசியாகவும் தசரதச் சக்கரவர்த்தியின் மனைவியாகவும் திகழும் நீ, உனக்கென்று தேவையானால் கூட கோசலையைக் கேட்டுத்தான் பெறல் வேண்டும் என்று கூறகிறாள். முதலில் இராமனை தான் ஈன்றெடுத்த மகனாக நினைத்த கைகேயியின் மனநிலையானது கூனியின் கூற்றிற்கு பிறகு, என் மகன் பரதன் நாட்டை ஆள்வதற்கு நீ வழியைச் சொல் என்கிறாள். பரதனை, என் செல்வன் என்றும் இராமனை சீதையின் கணவன் என்றும் இரண்டாவதாக கைகேயி கூறுகிறாள்.

**சுமித்திரை கதாபாத்திரம்**

இராமாயணக் கதையில் தசரதனின் மூத்த மனைவி கோசலையைப் போன்றோ அல்லது இளைய மனைவி கைகேயியைப் போன்றோ சுமத்திரைக்கு முக்கியமான இடமில்லை. எனினும் தன்னலம் அற்ற ஒரு பெண்ணாக அவள் இராமாயணத்தில் உருவகப்படுத்தப்பட்டுள்ளாள் மூத்தோனாகிய இராமனுக்கு முடி சூட்ட இருந்த நிலையில் தன் மகனுக்கு அரசு உரிமைக் கேட்ட கைகேயியைப் போல் அல்லாமல் தன்னுடைய மூத்த குடிகளின் மக்களில் மூத்தோர்களாகிய இராமன், பரதன் இவர்களுக்கு மட்டுமே தன்னுடைய மகன்கள் சேவை செய்ய வேண்டும் என்ற மனப்பக்குவத்துடன் வாழ்ந்தவள். தசரதன்

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*
*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X


கைகேயிக்கு அளித்த வரங்களின்படி இராமன் பதினான்கு ஆண்டுகள் காட்டுக்குச் செல்ல நினைக்கின்ற போது தன்னுடைய மகனான இலக்குவனையும் உடனே தன் அண்ணன் அண்ணியுடன் கானகத்திற்கு வழி அனுப்பி வைத்தாள். அது மட்டுமல்லாமல் காட்டில் தன்னுடைய அண்ணனுக்கு இராமனுக்கு ஏதாவது துன்பமோ அல்லது இறப்போ நேரிட்டால் தன் அண்ணன் இறப்பதற்கு முன்னரே நீ உன் உயிரை விட்டுவிடு என போருக்கு அனுப்புவதை போல தன்னுடைய மகனை காட்டிற்கு அனுப்பி வைத்தாள் சுமித்திரை. தன்மகனுக்கு எந்த துன்பம் நேர்ந்தாலும் பரவாயில்லை இராமனுக்கு எந்த இடையூறும் நேராமல் கண்ணை இமைகாப்பதுபோல் காத்து நிற்க கூறுகிறாள்.

**சீதையின் பாத்திரப்படைப்பு**

சீதையின் மனநிலையை கம்பனின் வரிகள் அழகாக வெளிப்படுத்துகின்றன. சீதை மாற்றான் சிறையிலிருந்து துன்பங்கள் அனுபவித்து துடித்துக் கொண்டிருக்கும் போது, அனுமன் அசோகவனத்தில் சென்று சீதையைப் பார்த்து, அன்னையே என் தோள் மேல் விரைந்து ஏறுங்கள். ஒரு நொடியில் இராமபிரானின் முன்னர் தங்களைக் கொண்டு சேர்க்கிறேன் என்று விண்ணப்பம் செய்கிறான். ஆனால் அந்த விண்ணப்பத்தை சீதை ஏற்கவில்லை. சீதையின் மனநிலையை, கம்பர் கூறும் போது,

**வேலையின் இடையே வந்து வெய்யவர்**
**கோவிநின்னொடும் வெஞ்சரம் கோர்த்த போது**
**ஆலம் அன்னவர்க்கு அல்லை ஏற்கு அவ்வையால்**
**காலவும் தடுமாறும் தனிமை யோய் (கம்ப., 5357)**

என்ற பாடலால் அறியலாம்.

நீ என்னை சுமந்து கொண்டு செல்லும்போது அரக்கர்களுக்கு அது தெரிந்து விட்டால் அவர்கள் உன் மீது கொடிய அம்புகளைச் செலுத்துவார்கள். அப்போது நீ உன்னையும் காத்துக் கொண்டு என்னையும் காப்பாற்ற வேண்டும். என்னால் உனக்கு எந்த இடர்பாடும் ஏற்பட்டு விடக்கூடாது என்கிறாள் சீதை. இதனால் சீதையின் அறிவின் கூர்மை தெளிவாகிறது. "மேலும், நீ என்னை பத்திரமாக மீட்டு விடுவதாக இருந்தாலும் அப்போதும் குறைகள் வந்து சேரும். என்னுடைய தலைவனுக்கு என்னை மீட்கும் ஆற்றல் இல்லை என்று அவப்பெயர் ஏற்பட்டுவிடும். இராவணன் யாரும் இல்லாத நேரத்தில் என்னை அபகரித்து வந்தான். அதைப்போல இராவணனுடைய சிறையிலிருந்து யாரும் இல்லாத நேரத்தில் நீ என்னை மீட்க முயன்றால் இராவணன் செய்த பிழையை நீயும் செய்ததாகிவிடும். எனவே இவ்விண்ணப்பத்தை விட்டுவிடு என்கிறாள். இதிலிருந்து தலைவனின் வெற்றியை விட நேர்மையாக இருக்க வேண்டும் என்று சீதையின் மனநிலையை கூறுகிறார். மேலும்,

**வேறும் உண்டு உரை அதுகேள் மெய்ம்மையோய்**
**ஏறு சேதுகன் மேனி அல்லால் இடை**

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*



*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**ஆறும் உடையான் ஐம்பொறி நின்னையும் ஆண் எனக்**
**கூறும் இவ்வுருவத் தீண்டுதல் கூடுமோ (கம்ப., 5363)**

அனுமனே! என்னுடைய பார்வையில் நீ ஒரு குழந்தையாக தெரிகின்றாய். நீயும் என்னை தாய் என நினைக்கின்றாய். ஆனாலும் வீரமிக்க என்னுடைய கணவனின் மேனியை மட்டுமே தீண்டிய நான் உன் மேனியை தீண்ட விரும்பவில்லை என்கிறாள். மேலும் பெண் கற்பு குறித்து தொல்காப்பியம் கூறும் போது, உயிரைக் காட்டிலும் சிறந்தது நாணம். அந்த நாணத்தைக் காட்டிலும் சிறந்தது கற்பு என்பதை, பாடல்வரி

**உயிரினும் சிறந்தன்று நானே நாணினும்**
**செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று (தொல்.பொரு., 111)**

என கூறுகிறார். மகளிரின் கற்பினை இல்லற அமைப்புடன் இணைத்து தெய்வீகத்தோடு தொடர்புபடுத்தி தொல்காப்பியத்தில் பாடப்படுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக இருந்தாள் சீதை. இப்படிப்பட்ட கற்பு நிலையில் தவறாது விளங்கினாள் சீதை என்பதையும் கணவன் மேல் கொண்ட உண்மையான பதி பக்தியையும் நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

**ஊர்மிளா கதாபாத்திரம்**

தொல்காப்பியர் சங்க இலக்கிய மகளீரைப் பாடும் போதெல்லாம் அவர்க்குரிய கற்பினை வைத்து அறிய முடிகிறது. மகளிரின் கற்பினை இல்லற அமைப்புடன் இணைத்து தெய்வீகத்தோடு தொடர்புபடுத்தி பாடுகிறார். தமிழ் சமுதாயம் பெண்ணிடம் கற்பை போற்று. கற்புடையவளாக வாழ் என்று சொல்லி சொல்லியே அவ்வாழ்வின் மீது மாற்ற இயலாத விருப்பம் உடையவளாக பெண்ணை தயார் படுத்தியது. தன்னை வருத்தியாவது 'கற்புக்கரசி' என்ற பெயர் வாங்க வேண்டும் எண்ணத்தை ஏற்படுத்தியது. அவள் அடிபணிந்து நடக்க வேண்டும், பேசாமல் அடக்க ஒடுக்கமாக ஒதுங்கி இருக்க வேண்டும் என்ற நிர்பந்தம் இருந்தது. ஒரு பெண்ணுக்கு மனைவி என்பதால் மட்டும் அன்போ பொருளாதார மேம்பாடோ சமூகத்தில் அந்தஸ்தோ கிடைத்து விடுவதில்லை.

இராமாயணத்தில் வருகின்ற லட்சுமணன் மனைவி ஊர்மிளா சீதையை விட உயர்ந்த பெண்மணி என்று போற்றப்படுகிறார். ஏனென்றால் சீதை, கணவன் எங்கே இருக்கிறாரோ அதே இடத்தில் அவரைப் பிரியாமல் நானும் இருப்பேன் என்று தன் கணவனோடு காட்டுக்கு சென்றார். ஆனால் இராமனுக்கும் சீதைக்கும் பாதுகாப்பாகவும் காவலராகவும் சென்ற லட்சுமணனுடைய மனைவி ஊர்மிளா அடம்பிடிக்காமல் தன்னுடைய கணவனுக்கு தன் மேல் வெறுப்பு வரும்படியாக ஒரு நாடகம் ஆடுகிறாள். இராமனுடன் லட்சுமணனும் காட்டுக்கு செல்ல தயாராகி ஊர்மிளாவிடம் விடைப் பெற்று செல்ல தன் மனைவியின் அந்தப்புரத்திற்குள் நுழைகிறான். அப்போது அவன் கண்ட காட்சி அவனை மிரள வைக்கிறது. ஊர்மிளா தன்னை உயர்ந்த அலங்கார தோற்றத்துடன் ஆபரணங்கள் அனைத்தையும் அணிந்து கொண்டு அந்தபுரத்தில் மிகவும் சந்தோஷமாக வலம்வருகிறாள். இதனைக் கண்ட லட்சுமணன்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

கோபத்தில் ஊர்மிளாவின் மீது கோபம் கொள்கிறான். கேட்கக் கூடாத வார்த்தைகளைக் கேட்டு கோபத்துடன் வெளியே வருகிறான்.

லட்சுமணன் மரவுரி தரித்து அண்ணன் அண்ணியுடன் வனவாசம் சென்றதும் ஊர்மிளா அழுது புலம்பிக் கொண்டிருக்கிறாள். தானும் சீதையைப் போல அடம்பிடித்தாலும் அல்லது ஆசா பாசங்களை காண்பித்துயிருந்தாலும் லட்சுமணனுக்கு தன் மேல் இருக்கும் அன்பு, பாசம், காதல் காரணமாக இராமனுக்கும் சீதைக்கும் உரிய பணிவிடையை சரியாக புரியமாட்டார் என்று எண்ணி தன் மேல்வெறுப்பு வரும்படியாக நடந்து கொண்டாள். தன்னுடைய கணவன் பதினான்கு ஆண்டுகள் கண் விழித்து வனவாசம் இருக்கும் நேரத்தில் இராமனுக்கும் சீதைக்கும் முழு நேரமும் பணிவிடை செய்யவும் மனைவியைப்பிரிந்த சோகத்தில் அவனுடைய வேலையில் பணிவிடையில் இடஞ்சல்கள் செய்யாமல் அவனுக்கு உதவியாக இருந்தாள் ஊர்மிளா. வனவாசம் முடிந்து தன் கணவன் வருவான் என காத்திருக்கிறாள் ஊர்மிளா. பதினான்கு ஆண்டுகளில் பரிதவிப்பான காத்திருப்பு அன்று முடிவடைகிறது. கணவன் வருகிறான் ஆசை தீர அள்ளி அணைப்பான் கொஞ்சி பேசுவான் என மகிழ்ந்து காத்திருந்தாள் ஊர்மிளா. தன்னை கண்டதும் கண்ணே அண்ணனுக்கு பதினான்கு ஆண்டுகள் பணிவிடை செய்து நான் தூங்கவே இல்லை. பணிவிடைச் செய்து தேக்கி வைத்த தூக்கத்தை மொத்தமாய் தூங்க வேண்டும் ஊர்மிளா உன் மடியைக்கொடு தலைச் சாய்த்து படுத்துக் கொள்கிறேன் என்று மனைவி மடியில் தலைவைத்து தூங்க ஆரம்பித்தான். இதிலிருந்து சீதா தேவியை விட உயர்ந்தவள் என கருதப்படுகிறாள்.

**மண்டோதரியின் பாத்திரப்படைப்பு**

கம்பனின் படைப்பில் இராவணனின் மனைவி மண்டோதரியின் கதாபாத்திரம் மறக்க முடியாத ஒன்றாகும். மண்டோதரியின் இரண்டாவது மகன் அனுமனோடு நடந்த போரில் இறக்கிறான். இந்த செய்தியைக் கேட்ட மண்டோதரி மகனை தேடிச்சென்று புலம்பி அருகில் நின்ற கணவனின் கால்களில் விழுந்து புலம்புகிறாள். **"மயன் மகள் வயிறுஅலைத்து அலறிமாழ்கினாள்" (கம்ப., 5715)** தன்னுடைய கணவன் கொண்ட காமத்தினால் தான் மகன் இறந்து விட்டான். மகன் இறந்தாலும் அதை வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாமல் மனதிற்குள்ளேயே அழுது கலங்குகிறாள். ஆனால் கும்பகர்ணன், இந்திரஜித், போன்றவர்களின் இறப்பிற்கு பிறகு இராவணனுடைய மனதில் காமம் இல்லை. சோகமே குடிக்கொண்டிருக்கிறது. சீதை மேல் கொண்ட காமம் இராமனுடன் போரை உருவாக்கியது. "நானே இந்த நெடும் பகையைத் தேடிக்கொண்டேன்என்று இராவணன் மண்டோதரியிடம் கூறுகிறான். இராவணனை நன்கு அறிந்தவள் மண்டோதரி. எனவே இராவணனின் மனமாற்றம் உலகிற்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் மண்டோதரிக்கு தெரிந்து விட்டது இராவணனின் மனச்சிறையில் சீதை இருக்கிறாள் என்று ராமன் திடமாக எண்ணி அம்பு விடுகிறான் இராவணனின் மார்பை அம்பு துளைக்கிறது. இதை கண்ணுற்ற மண்டோதரி,

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**வெள்எருக்கஞ் சடைமுடியான் வெற்பு எடுத்த**
**திருமேனி மேலும் கீழும்**
**எள் இருக்கும் இடம் இன்றி உயிர் இருக்கும்**
**இடன் நாடி, இழைத்தவாரோ?**
**கள்இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை**
**மனச் சிறையில் கரந்த காதல்**
**உள்ளிருக்கும் எனக்கருதி உடல் புகுந்து**
**தடவியதோ ஒருவன் வாளி? (கம்ப., 9940)**

என்று கணவன் சீதையைப் பற்றிய எண்ணத்தை விட்டு விட்டான். இது தெரியாமல் இராமனுடைய ராம பாணம் என் கணவன் நெஞ்சில் புகுந்து ஒவ்வோரிடமாகத் தேடி ஏமாற்றம் அடைந்துள்ளது. இராம பாணத்திற்கு இந்த கதியா என்று தன் கணவனின் தூய்மையை நிரூபிக்கிறாள். தன்னுடைய கணவன் தவறு செய்தாலும் திருந்திவிட்டான் என்பதற்காக தன்னுடைய கணவன் தூய்மையானவன் எனக் கூறுகிறாள். இதிலிருந்து மண்டோதரியின் மனப்போக்கினை நம்மால் அறிந்து கொள்ள முடிகின்றது.

**திரிசடை கதாபாத்திரம்**

கம்பராமாயணத்தில் அடுத்த பெண் கதாபாத்திரம் திரிசடை. திரிசடையை முச்சடையாள் என இராமாயண காப்பியம் குறிப்பிடுகிறது. இக்காப்பியத்தில் அரக்கர்குல இராவணனின் தம்பி விபீடனின் மகள் ஆவாள். பிறப்பால் திரிசடை அரக்க குலத்தைச் சேர்ந்தவள். ஆனால் அவள் காட்டும் அன்பின் காரணமாக தாயினும் இனியவள் என புகழப்படுகிறாள். கம்பன் தாய்க்கு நிகராக திரிசடையை அறிமுகம் செய்கிறார். அசோகவனத்தில் அரக்கர் குலத்தில் தோன்றிய பெண் இராவணனால் சிறைபிடிக்கப்பட்ட சீதா தேவியின் மேல் ஆத்மார்த்தமானஅன்பும் இரக்கமும் கொண்டவள். சீதைக்கு உற்ற நேரத்தில் உதவிபுரிபவளாக இருந்தாள். சீதை திரிசடையை அன்னையே என்று அழைக்கிறாள்.

**முடிவுரை**

கம்பராமாயணத்தில் பெண் பாத்திரங்களின் சிறப்புகளைக் குறித்து இக்கட்டுரை ஆராய்ந்துள்ளது. கைகேயி தன் வாழ்க்கை நிலைப்பாட்டிற்காக இரண்டு வரங்களைக் கேட்டபோது மற்றவர்களின் பேச்சிற்கு உள்ளானாலும் பழியை ஏற்றுக்கொண்டு இராமனின் அவதார நோக்கத்தை புரிய வைத்தார். சீதையோ அயலவனின் சிறையில் இருந்து விடுபட துடிக்கும் நிலையில் இருக்கும்போது அனுமன் மூலம் அதற்கு வழி கிடைத்தும் தன் கணவனின் வீரத்திற்கு அவமானம் வந்து விடக்கூடாது என காத்திருக்கிறாள். மண்டோதரியோ எல்லோரும் இராவணனை காமுகனாக நோக்கும்போது அவர் எப்போதே சீதையை நெஞ்சில் இருந்து நீக்கிவிட்டார் இது தெரியாமல் இராமபாணம் ஏமாந்து விட்டது என்று பெருமிதம்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

கொள்கிறாள். சுமித்திரை தன்னலமற்ற பெண்ணாகவும் கோசலை குணத்தால் பெண்களிலே சிறந்தவள் என்றும் திரிசடை சீதாதேவியின் அன்னைக்கு நிகரானவள் என்றும் மண்டோதரி கணவனோடு தன் உயிரை மாய்த்தாள் என்றும் சொல்லக்கூடிய அளவிற்கு இந்த பெண் கதாபாத்திரங்கள் சிறந்து விளங்குகிறார்கள். ஆனால் கம்பராமாயணத்தில் ஊர்மிளா கதாபாத்திரம் மட்டும்தான் தியாக பாத்திரமாக விளங்குகிறாள்.

**குறிப்புகள்**

[1] குமாரி கிருஷ்ணவேணி, ல. "நித்திலத்தில் புதுமைப் பெண்", *வெற்றிமுனை,* பன்னாட்டு வாழ்வியல் மேம்பாட்டு இதழ், உலகத்தமிழ் வளர்ச்சி மாநாடு, 2024.
[2] சிவஞானம், ம. பொ. *கம்பர் கவியின்பம்.* இன்ப நிலையம், மயிலாப்பூர், ஜூன் 1966.
[3] சொர்ண ஜெயா, பி. "சங்க இலக்கியங்களில் பெண்களின் வாழ்வியல் நெறிகள்." *தமிழ்மொழி மற்றும் இலக்கியப் பன்னாட்டு ஆய்விதழ்.* தொகுதி.2, சிறப்பு இதழ் 3, பிப்.2020, பக். 215.
[4] திருமுருக கிருபானந்த வாரியார். *கம்பராமாயண விரிவுரை.* கார்த்திகேயன் பப்ளிகேஷன்ஸ், சென்னை.
[5] மாணிக்கம், வ. சுப. *கம்பர்.* மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1965.
[6] *முதலாம் ஆண்டு விழா மலர்.* நெல்லை கம்பன் கழகம், திருநெல்வேலி, டிசம்பர்- 2009.
[7] ரகுநாதன், எஸ். *சமுதாய முன்னேற்றத்தில் மகளிர்.* முருகானந்தா பதிப்பகம், கே.கே.நகர், சென்னை- 78.
[8] ஸ்ரீமத் சுவாமி & சித்பவானந்தர். *இராமாயணம்.* ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருப்பாராய்த்துறை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.